REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

"புதுமைக் காதலர்கள்!"

பத்து வயது நிரம்பப்பெற்ற ஹிசர் பசாபின் என்ற ஒரு துருக்கிய இளைஞர் 8 வயதுடைய தமது 'உளங்கவர்' 'காதலி' யைக் கடத்திச் செல்லுகையில் போலீசாரால் பிடிபட்டிருக்கிறார்!

அங்காராவைச் சேர்ந்த அவர், தமது நண்பர்களின் உதவியால், தமது 'காதலி'யின் வீட்டுச் சாளரம் வழி உட்புகுந்து, அவளைக் கம்பளத்தில் சுற்றி மலைப்பாங்கான இடத்துக்குக் கடத்திச் செல்லுகையிலேயே போலீசார் அவரைப் பிடித்துச் சென்றனராம்.

'காதலி'யின் தகப்பனிடம், தாம் அவள் மேல் கொண்டிருக்கும் 'காதலை' வெளிப்படுத்த, அதனால் 'மனம் மாறிய' பெண்ணின் தகப்பனார், இன்னும் சில ஆண்டுகளில் தமது பெண்ணையே அவர் மணந்துகொள்ளலாம் என உறுதி கூறினர் என தெரிகிறது!

மலர் 2] சென்னை: கார்த்திகை 15உ செவ்வாய் (30—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 16உ புதன் (1—12—54) [இதழ் 145

'நீக்கிய அதிகாரியை மீண்டும் நியமிக்கவும்'

கோரிக்கையை வலியுறுத்தி இரு மாணவிகள் உண்ணநோன்பு

மாணவிகள் அனைவரும் கல்லூரி செல்ல மறுப்பு

அலகாபாத், நவ. 27—

இங்குள்ள அமீதியா பெண் கல்லூரி மாணவிகள் இருவர், இன்று பகல் முதல் உண்ண நோன்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

13-ந் தேதி முதல் கல்லூரி மாணவிகள் அனைவரும் தொடர்ந்து பள்ளி செல்லாமல் இருந்து வருகின்றனர்.

அக்கல்லூரியின் தலைமை அதிகாரியை, கல்லூரி நிர்வாகக் குழு வேலையிலிருந்து நீக்கிவிட்டதை மாற்றி, மீண்டும் அவ்வதிகாரியை அதே வேலையில் அமர்த்த வேண்டுமென்பதே மாணவிகளின் கோரிக்கையாகும்.

அமீதா கல்லூரி மாணவிகள் மேற்கொண்டுள்ள போக்கிற்கு ஆதரவாக, மற்றக் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளும், நிர்வாகக் குழுவினரின் பாழ்பட்டப் போக்கைக் கண்டித்து, அக்கல்லூரி முன் இன்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கொள்கை வீரன்

குமரவேலுக்கு நினைவுச்சின்னம்

"கல்லக்குடி அறப்போர் வீரனும், சிறை தந்த பரிசான காச நோயால் உயிர் நீத்த வருமான இளைஞர் குமரவேலரின் நினைவுச் சின்னம், தி. மு. கழகத் தோழர்களது பெருமுயற்சியால் மணப்பாறையில் சுமார் பதினெரு அடிஉயரம் எழுப்பப்பட்டுள்ளது.

27—11—54-ம் நாளன்று தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி வேண்டிக் கொள்ள, தோழர் சம்பத் அவர்கள், நினைவுச் சின்னத்தின் மீது தி. மு. கழகக் கொடியை உயர்த்தி, குமரவேலனின் படத்தையும் திறந்துவைத்தார்.

நினைவுச் சின்னப் பணியில் பங்குகொண்டவர்களில் தோழர்கள் கோபால், மதிவாணன், கோதண்டராமன் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

'ஜாதி மத பேதங்களை ஒழித்து மாணவர்கள் வாழ வேண்டும்'

'சுயமாக சிந்தித்து நல்ல முடிவிற்கு வருவதே வாழ்க்கையில் வெற்றி தரும்'

சென்னையை அடுத்துள்ள வாலாஜாபாத் நகரிலிருக்கும் இந்து மத பாடசாலையில் பொது விஞ்ஞானப் பிரிவைத் துவக்கி வைத்த சென்னை மாநில் கல்வி இலாக்கா தலைமை அதிகாரி திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள், "நாட்டுக்குப் பொதுவான நல்ல குடிமக்களாக மாணவர்கள் வளர வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்குமட்டுமே நல்லவர்களென்ற பெயர் எடுக்கக் கூடாது. மாணவர்கள், ஜாதிமத பேதங்களை ஒழித்து வாழ வேண்டும்," என்று அறிவுரை பகன்றார்.

பின்னர் பேசிய சென்னை சட்ட இலாகா உதவி காரியதரிசி திரு. சி. டி. நடராஜன் அவர்கள், "பழையவை என்பதால் எல்லாவற்றையும் ஒதுக்கிவிடுவதும், புதியவை என்பதால் எல்லாவற்றையுமே ஏற்றுக்கொள்வதும் கூடாது; மாணவர்கள், எல்லாவற்றிலுமிருக்கும் நல்லவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு, சுதந்திரமாகச் சிந்தித்து, தாங்களாகவே ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும்; அப்போதுதான் உங்களுக்கு வாழ்க்கையில் வெற்றி கிட்டும்," என்று கூறி வாழ்த்தினர்.

கூட்டத்திற்கு மாநில ஸ்தல ஸ்தாபன அதிகாரி திரு. ஜே. சிவானந்தம் தலைமை தாங்கினர். சட்ட இலாகாக் காரியதரிசி திரு. அழகிரிசாமியும் விழாவில் கலந்து கொண்டார்.

பள்ளி நிர்வாகியான திரு. மாசிலாமணி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது. விழாத் துவக்கத்தில், அதிகாரிகள், மாணவர் விடுதியினையும், விளையாட்டுகளையும் பார்வையிட்டனர் எனத் தெரிகிறது.

தூத்துக்குடித் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

சர்க்கார் அதிகாரியின் இறுதி நேர சமரச முயற்சி தோல்வி

தூத்துக்குடி, நவ. 29—

தூத்துக்குடி துறைமுகத் தொழிலாளர்கள் நேற்று மாலை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

துறைமுகத்தில் உள்ள 5 கப்பல்களில், ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் எதுவும் நடைபெற இயலாது போய்விட்டது. இந்த வேலை நிறுத்தத்தினுல் தங்கள் குறைகளைப் பற்றி கண்டிராக்டர்களிடம் பலமுறை முறையிட்டும் பலன் எதும் கிடைக்காத காரணத்தால் கடந்த 13-ந் தேதியன்றே வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக முன்அறிவிப்புச் செய்திருந்தனர் தொழிலாளர்கள்.

அந்த முன்அறிவிப்பும் பலன் தராததினுல் நேற்று மாலை முதல் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர். சர்க்கார் தொழிலாளர் இலாக்கா அதிகாரி, இருதரப்பாரிடையேயும் சமரசம் செய்து வைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தனவென்றும் தெரிகிறது.

★

கல்கத்தா துறைமுகத்திலும் இறக்குமதி இல்லை

தொழிலாளர் வேலை நிறுத்தம் வலுக்கிறது

கல்கத்தா, நவ. 28—

கல்கத்தா துறைமுகத்தில் இறக்குமதி வேலை செய்யும் தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் துறைமுகம் முழுவதும் பரவி வலுத்துள்ளது என்று தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஜப்பான் பாதையில் தென் கொரியா

சட்டசபை அங்கத்தினர்களிடையே அடிதடி

சிங்மன் ரீ தேர்தல் விவகாரமே காரணமாம்!

தென் கொரிய தேசிய சட்டசபையில் சர்க்கார் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் கைகலந்து கொண்டனர். அடிதடிப் பிரயோகம் சாதாரணமாக நடைபெற்றிருக்கிறது அங்கத்தினர்களிடையே!

அவர்கள் நடத்திக்கொண்டிருந்த கலகத்தைக் கலைக்க, சபைக் காவலாளிகள் அழைக்கப்பட்டனர்!

இந்த கலவரத்துக்குக் காரணம், ஜனதிபதி சிங்மன் ரீ மீண்டும் தேர்தலுக்கு நிற்க வசதி செய்யும் அரசியல் திருத்தம் நிறைவேறியதா, இல்லையா என்ற விவாதம் தான் என்று சொல்லப்படுகிறது

சபை அங்கத்தினர்களில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை இருந்ததால் நிறைவேறியதாகவே கொள்ள வேண்டும் என்று லிபரல் கட்சி (சிங்மன் ரீ கட்சி)யினர் கோரினராம்.

"ஒரு வாக்கு வித்தியாசத்தில் திருத்தம் தோற்றுவிட்டது," என்று தான் கூறியது தவறு என்று லிபரல் கட்சியைச் சேர்ந்த சபைத் தலைவர் கூறினர்.

உடனே சீறி எழுந்த எதிர்க் கட்சியைச் சார்ந்த ஒருவர் ஓடிச் சென்று சபைத் தலைவருடன் சண்டையிட ஆரம்பித்துவிட்டார்.

அதைத் தொடர்ந்த வாதப்பிரதிவாதம், கூச்சல், குழப்பம், இவைகளிடையில் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் அடி உதைகளைப் பரிமாறிக் கொண்டனராம்; ஆனால் யாருக்கும் எவ்வித பலத்த காயமும் ஏற்படவில்லையாம்.

ராஜப்பிரமுகர்கள் என்ற பதவிகளை ஒழிப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் சர்க்கார் உத்தேசிக்கவில்லை யென்று உள்நாட்டு மந்திரி கட்ஜு, ராஜ்ய சபையில் அறிவித்திருக்கிறார்.

இராணுவத் தளபதியின் பதவிக்குச் சீட்டு

பாவோடாய் நடவடிக்கை

வியட்நாம் இராணுவத் தலைமைக் காரியாலய தளபதி ஜெனரல் நிகுயென் வான்ஹின்னுக்கும், பிரதமர் தீன் தீமுக்கும் இடையே இருந்துவந்த தகராறில், பிரதமருக்கு சாதகமாக மன்னர் பாவோடாய், ஜெனரல் வான் ஹின்னை பதவியிலிருந்து வெளியேற்ற உத்திரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

மன்னர் உத்திரவில், 'சர்க்காருக்கு எதிராக மீறி நடப்பதற்கு வான் ஹின்னை அனுமதிக்க இயலாது,' என்று கூறியிருக்கிறாராம்.

சிவன் சிலை கொண்ட ஜைன மதக் கோயில்!

களவுபோன சிலைக்கு, பதில் சிலை வைத்தபின் தடை உத்தரவு!

இந்தூர், நவ. 27—

[illegible] ரட்லம் என்ற ஊரில் சாந்தி ந[illegible]தர் என்ற சிவன் கோயில் இருக்கிறது. அக்கோயில் ஜைனர்களுக்[illegible] சொந்தமானதாம். அக்கோயிலி[illegible] இருந்த சிவன் சிலை சில வாரங்[illegible]க்குமுன் காணமற் போயிற்று.

[illegible]க்கோயில் நிர்வாகத்தை மத்திய [illegible] பாரத் சர்க்கார் ஏற்றுக் கொ[illegible]டு, மாவட்டக் கலெக்டரிடம் கண்[illegible]ணிப்பை ஒப்படைத்தது.

அ[illegible]ல் ஒரு புதிய சிவன் சிலையையும் க[illegible]லக்டர் வைத்து, அதற்கான சுத்தி[illegible] சடங்குகளையும் செய்வித்தார். [illegible]து நடந்த சில மணிகளுக்குள்ளா[illegible] அங்குள்ள ஜைனர்களின் கோரிக்கைக்கிணங்க மத்திய பாரத் உயர் நீதிமன்றம் பிறப்பித்த புதிய சிலையை வைக்கக் கூடாது என்ற தடை உத்தரவு கலெக்டரிடம் கொடுக்கப்பட்டது.

பலகாலமாக அக்கோயிலில் சிவன் சிலை வைக்கப்பட்டு இருந்த போதிலும், அக்கோயில் ஜைன மதக் கோயில் என்று, ஜைனர்கள் கூறுகின்றனர்.

களவு போன சிவன் சிலையை மீட்டு வைக்கும்படியாகவாவது, அல்லது புதிய சிலை ஒன்றை வைக்கும்படியாகவாவது ரட்லம் மக்களில் ஒரு சாரார் கிளர்ச்சி செய்துவந்தனர்.

சிவன் கோயிலுக்கு ஜைன மத நிர்வாகி!

பூஜை செய்ய நாமதாரிகள்!

பங்களூரில்மஞ்சநாதசாமி என்ற பெயரிய சிவன் கோயில் ஒன்று உள்ளது. ஜைன மதத்தைச் சேர்ந்த ஒருவரின் நிர்வாகத்தில் அக்கோயில் இருந்து வருகிறது. வழக்கத்திற்கு மாருக, அங்குள்ள சிவன் சிலைக்கு பூஜை செய்து வருகிறவர்கள் நாமதாரிகளான வைஷ்ணவ பட்டாச்சாரிகளாவர்.

இந்தத் தகவலை அங்கு நடைபெற்ற சர்வதர்ம மாநாட்டைத் திறந்து வைத்த, சர் மிர்சா இஸ்மாயில் தனது திறப்புரையில் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசினர்.

ம. சோ. கட்சி ஊழியர் கொடுவினை

தி. மு. க. உறுப்பினரைத் தாக்கினர்

உடுமலை தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் சுப்பிரமணியம் அவர்களை, பிரிமியர் மில்லில் வேலை பார்க்கும் பிரஜா சோஷலிஸ்ட் ஊழியர்கள், 27—11—54 இரவு 7 மணி அளவில் மில்லிற்கு முன்புறம் உள்ள பூலாங்கிணர் என்னும் கிராமத்தில், தடிகளால் காலிலும், மார்பிலும் பலமாக தாக்கிவிட்டார்கள். தாக்கப்பட்ட தோழர் மருந்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கருத்து வேறுபாடு காரணமாய் இந்நிகழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுபோலவே பல நிகழ்ச்சிகள் உடுமலை வட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டுவருகிறது. (ட [illegible]

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 30—11—1954 செவ்வாய்

தடை கூடாது!

இங்கு, படித்தவர்களின் தொகை நூற்றுக்குப் பத்திலிருந்து, பதினைந்து வரைதான் இருந்துவருகிறது. இச்சிறு தொகையிலும், தாமாகச் சிந்தித்து செயலாற்ற முனையும் அளவில் கல்வி கற்றிருப்போர் எண்ணிக்கை, விரல்விட்டு எண்ணக்கூடியதாகத்தான் இருக்கிறது. இவர்களிடத்தில் தேவைப்படும் அளவிற்கு அரசியல் விழிப்பு இருக்க முடியும் என, தன்னையும் ஒரு முற்போக்கு இதழ் எனப் பீத்திக் கொள்ளும் 'ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டரையும்,' துணிந்து கூற முன்வராது. அரசியல் விழிப்புணர்வு குறைந்து காணப்பெறும் மக்களிடை, சிறந்த மக்களாட்சி முறை அரும்புவது இயலாது என்பதும் ஒப்ப முடிந்த உண்மை. அரசியல் விழிப்பில் பின்தங்கிக் கிடக்கிற தாங்கள் பெற்றுள்ள வாக்குரிமையைத் தங்கள் நலத்திற்குகந்த வகையில் பயன்படுத்திக்கொள்ளக் கூட முடியாமல், தங்களை அறியாமலே தங்களைப் பெருந் தொல்லைக்குள் சிக்கவைத்துக் கொள்வதையும், நாம் நடைமுறையில் கண்டு வருகிறோம். எனவே, வீரமற்றவன் கையில் கூர்வாள் கிடைப்பதும், விவேகமற்றவர் கையில் வாக்குரிமை கிடைப்பதும், அவைகளால் அவர்களுக்கு ஏற்படும் நன்மையைக் காட்டிலும், தீமைதான் கூடுதலாக இருக்கும் என்பதும் அனுபவ உண்மையாகும்.

போதிய அளவில் அரசியல் விழிப்புணர்வு பெறறில்லாத காரணத்தினால், வயது வந்த மக்கள் பெற்றுள்ள வாக்குரிமை, அவர்களுக்கு நலஞ் செய்வதற்குப் பதிலாகக் கேடு சூழ்கிறது என்பது ஒரு பக்கம் இருக்க, பழைமை மோகத்திலும், மத, மூடநம்பிக்கையிலும் படிந்தவர்களாக அம்மக்கள் இருந்துவிடுவார்களானால், அத்தகையவர் பெற்றுள்ள வாக்குரிமையின் விளைவு, இரட்டிப்புக் கேட்டினைத் தருவதாக முடிந்தும் வருகிறது. இத்தகைய வாக்குரிமை பெற்றிருப்பவர்களிடை, நடைபெறும் தேர்தலும், அதனால் உருவெடுக்கும் அரசும் வெறும் எலும்புக் கூடான மக்களாட்சி முறையாகுமே அல்லாது, உயிரும் சதையும் ஒன்றுபட்டு இயங்கும் சாரமுள்ள ஜனநாயகமாக ஒருக்காலும் இருக்க முடியாது. அதனால், அவர்களுக்குத் தேவைப்படும் ஆட்சி அமைதற்குப் பதிலாக, அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற மட்டரகமான ஆட்சிதான் அமைவதற்கு இடமேற்படும். நிற்க,

கல்வியறிவும், அரசியல் விழிப்புணர்வும் பெறறில்லாதவர்களாக உள்ள பெரும்பான்மை மக்களுக்கு, செய்தித்தாள்கள் மூலம் அரசியல் விழிப்பை ஊட்டுவது என்பது இயலாத காரியம். அதிலும் ஆதிக்கத்தார்களை ஆசிரியர்களாகக் கொண்ட இதழ்களால், அவ்வரும்பெரும் செயலைச் செய்யவே முடியாது. அவர்கள் இதழ் தரும் செய்திகள், மத மூடநம்பிக்கையைப் பெருக்கவும், இழிவுணர்ச்சிகளைக் கூட்டவும்தான் உதவுமே ஒழிய, மக்களிடம் குறைந்து காணப்பெறும் அரசியல் விழிப்பை வளமுள்ளதாக்க உதவவே உதவாது.

மக்களிடையே அரசியல் உணர்வை உண்டாக்குவதற்கு எழுத்தும் பயனற்றதாகப் போய்விடுகிற பொழுது, அச்செயலை செய்ய மிஞ்சி இருப்பதும், சிறந்த கருவியாக இருப்பதும் வாய்ப்பேச்சேயாகும். அந்தப் பேச்சுக்கும் தடை ஏற்படுமானால், அதுவும் ஆட்சியாளர்களிடமிருந்து அத்தடை பிறக்குமானால், அது நியாயமானதாகவோ, பொறுத்துக் கொள்ளக் கூடியதாகவோ ஒருக்காலும் இருக்க முடியாது. மக்கள் அறிவு வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ள பொது வாழ்வினர் ஒவ்வொருவரும், அரசியல், பொருளியல் கோட்பாடுகளில் முரண்பாடு கொண்ட கோட்பாட்டினராக அவர்கள் இருந்தபோதிலும், ஆட்சியாளர்களின் அளவு கடந்தச் செயலைக் கண்டித்தே தீருவர். ஆட்சியாளர்கள் தம் தவறை உணர்ந்து, பேச்சுக்கு போடும் இருட்டடிப்பை நீக்கும் வரையில், அயராது போராடியே தீருவர்.

இந்தியத் துணைக் கண்டம் விடுபட்ட நாள் முதற்கொண்டு, பொதுவாக நகரங்கள் அனைத்திலும், குறிப்பாக சென்னை நகரிலும், பொதுக் கூட்டங்களுக்கு நிரந்தரமாகத் தடை விதிக்கப்பட்டே வந்திருக்கிறது. மற்ற நகரங்களில் 144 தடை சட்டத்தைக்கொண்டும், சென்னை நகரில் நகர போலீஸ் சட்டம் 41-வது விதியைக் கொண்டும், பொது மக்களின் பேச்சுரிமையை ஆட்சியாளர்கள் தடுத்து வந்தனர். பொது மக்கள் அரசியல் விழிப்புப் பெறுமல் பார்த்துக் கொள்வதே, தாங்கள் மக்களுக்கு ஆற்ற வேண்டிய நன்மைகள் அனைத்திலும் தலையாயது எனக் காங்கிரஸ் ஆட்சியாளர் தீர்மானித்து நடந்து வந்திருக்கிறார்கள்.

தடை உத்திரவு போட்டிருந்த ஊர்களில் அத்தடை நீக்கப்பட்டதும், கூட்டத்தில் அமைக்கப்பெறும் ஒலிபெருக்கிக்கு முன்கூட்டியே போலீஸ் துறை அனுமதி பெற்றாக வேண்டும் என்ற நிபந்தனையைப் போட்டு, அவ்வனுமதி கொடுப்பதில் மறைமுகமாக 144 தடை உத்திரவின் சாரத்தை நடைமுறையில் திணித்துவந்தனர் ஆட்சியாளர்கள். அப்படியே ஒலிபெருக்கி அமைப்பதற்கு போலீஸ் துறை அனுமதி கொடுக்க முன்வந்த போதிலும், அதற்கான கால அளவைக் குறைத்து மக்களின் பேச்சுரிமைக்குக் கட்டுப்பாடு விதித்தனர். இதுவும், மக்களின் பேச்சுரிமையைக் கெடுக்க, ஆட்சியாளர்கள் மேற்கொண்ட — மேற்கொண்டுவரும் புறக்கடை நுழைவு முறையேயாகும்.

144 தடை சட்டத்தின் ஆதிகர்த்தாக்களோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அதிகாரவர்க்கத்தினராவர். தடை உத்திரவு என்று சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாத வகையில், அத்தடை உத்திரவின் பணியினை திறம்படவும் ஒழுங்காகவும் நிறைவேற்றிவரும் ஒலி பெருக்கி அனுமதி ஏற்பாட்டை உருவாக்கினவர்களோ, காங்கிரஸ் ஆட்சியாளர்களாவர்! முன்னையவர் எலுமிச்சம்பழப் புளிப்பென்றால், புளியம்பழப் புளிப்பாவர் பின்னையவர். 'உருட்சிக்கு நீளம், புளிப்புக்கு அதனப்பன்' என்ற நிலையில் தான், அந்த ஏகாதிபத்திய வெறியர்கள் உருவாக்கிய தடை சட்டமும், காங்கிரஸ் அதிகார மோகிகள் செயலாற்றிவரும் ஒலிபெருக்கி அனுமதி ஏற்பாடும் இருந்து வருகின்றன.

அந்தத் தடை நேரிடையானது! இந்தத் தடை மறைமுகமானது!

சென்னையில் இருந்த தடை உத்தரவு, தோழர் காமராசர் முதல் மந்திரியானதும் வாபஸ் பெறப்பட்டது. ஆனால், மறைமுகத் தடை உத்தரவான ஒலி பெருக்கி அனுமதி ஏற்பாடு மட்டும் என்றும்போல் அப்படியே உயிரோடு இருந்து வந்தது—இன்றும் இருந்து வருகிறது.

இந்த மறைமுகத் தடை போதாதென்று, பொதுமக்கள் பேச்சுரிமைக்குப் புதிய ஒரு தடையையும் நேரடியாக விதித்துவிட்டது, சென்னை நகர போலீஸ் துறை மேலிடம்.

அதாவது; ஒலி பெருக்கி இல்லாமல் முச்சந்திகளிலும், குறுக்குச் சந்துகளிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தக் கூடாது என்றும், நடத்த முற்பட்டால் தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள் என்றும் புதிய வாய்ப்பூட்டு ஏற்பாட்டைச் செய்திருக்கிறது சென்னை போலீஸ்துறை மேலிடம்.

சென்னையில் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு என பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமும் வசதி கொண்ட வெறும் நிலப்பரப்புகள் கிடையாது என்பது சென்னை போலீஸ் மேலிடம் அறியாததல்ல. இக்குறைபாட்டை ஆட்சியாளர்களும் அறிவர். அறிந்திருந்தும் இப்படி மக்களின் பேச்சுரிமைக்கு வாய்ப்பூட்டுப்போட போலீஸ் மேலிடத்தின் மூலம் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முன்வருகிறார்கள் என்றால், அதை, பொதுமக்களின் பேச்சுரிமையைக் காக்க வேண்டுமெனக் கவலை கொண்ட எவரும் நியாயமானது என ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இந்த வாய்ப்பூட்டு, பொது மக்களுக்கு, ஆட்சியாளர்களால் விடப்படும் அறைகூவலேயாகும்.

முச்சந்திப் பிள்ளையார் கோயில்களில் நடைபெறும் களியாட்டங்களுக்கும், குறுக்குச் சந்துகளில் நடைபெறும் குடியார்கள் அடியார்கள் பக்திக் கடைத் திறப்புக்கும், 'பொதுஜனப் போக்குவரத்துக்கு' அதிக அளவில் தொல்லை தருவதாக இருந்த போதிலும்கூட, இரவு பன்னிரண்டு மணிக்கு மேலும் ஒலி பெருக்கி வைத்துக் கொள்ளவும், உரத்துக் கூவவும் அனுமதி கொடுக்கிற சென்னை போலீஸ் மேலிடம், இன்றியமையாதத் தேவைப்படும் பொது மக்களுக்கு அரசியல் விழிப்பைத் தரும் அறிவியல் போதனை கூட்டங்களுக்கு அனுமதி தர மறுப்பது விந்தையிலும் விந்தையாகும்! பொதுமக்களிடம் இதனால் ஏற்பட்டு இருக்கிற அதிருப்தி மேலும் தீவிரமாவதற்கு முன், ஆட்சியாளர் இத்தடையை வாபஸ் பெறுவார்கள் என நம்புகிறோம்.

எஞ்சினீயர்களுக்கு வேலையில்லை

கல்வியை வியாபாரப் பொருளாக்குகிறார்கள்!

அரசியல் காரணங்களுக்காக கல்வித் துறையில் வஞ்சம் கூடாது!

மைசூர் கல்வி இலாகா அதிகாரி கருத்துரை

"எஞ்சினீயரிங் கல்விக்கு இப்போதுள்ள வசதிகள் போதுமானவையே; புதிய எஞ்சினீயரிங் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்பதை நான் ஆதரிக்கவில்லை; ஏனெனில், இப்போதுள்ள கல்லூரியிலிருந்தே ஆண்டுதோறும் **600** மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள். அரசாங்கம் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருந்தும்கூட, அத்தனை எஞ்சினீயர்களுக்கும் வேலை தர இயலவில்லை. ஏராளமான எஞ்சினீயரிங் பட்டதாரிகள் வேலையின்றி இருக்கிறார்கள்,"

—என்று, மைசூர் மாநில கல்வி இலாகா தலைமை அதிகாரி ஜே. பி. மல்லார்தியா கூறியிருக்கிறார். பெல்லாரி மாவட்ட வர்த்தக சங்கத்தார் கொடுத்த மகஜருக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறுகிறார்:—

"பெல்லாரி மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில், மாநிலத்தின் இதர மாவட்டங்களில் அமுலில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தையே அமுல் செய்யுமாறு கோரியுள்ளார்கள். இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு நான் பன்முறை சிபாரிசு செய்துவிட்டேன்; ஆனால், அரசியல் காரணங்களுக்காக அரசாங்கம் இதைச் செய்ய முன்வரவில்லை. பெல்லாரி மாவட்டம், இன்னமும் ஒரு அன்னியப் பகுதி போலவே நடத்தப்படுவது துரதிருஷ்டமானதாகும். பெல்லாரியில் உள்ள தலைவர்கள் இந்த நிலையைக் கவனித்து ஆவன செய்யவேண்டிய கடமையை உடையவர்களாக உள்ளார்கள்."

வர்த்தக சங்கத்தார், ஹோஸ்பெட், பெல்லாரி ஆகிய நகரங்களில் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும்; பெல்லாரி மாவட்டத்தில் இன்னும் ஏராளமான ஆரம்பப் பள்ளிகள் துவங்க வேண்டும் எனக் கோரியுள்ளதிற்குப் பதில் தரும் வகையில் அந்தக் கல்வி அதிகாரி, கூறியதாவது:-

"கடந்த ஆண்டில்தான் புதிய ஆரம்பப் பள்ளிகள் ஏதும் துவக்கப்படவில்லை. இம்மாதிரி நடைபெறுவது மைசூர் மாநில கல்வி இலாகாவின் சரித்திரத்தில் முதலாவதாகும்.

"சர்க்கார், இடைநிலைக் கல்வி, மற்றும் பலதரக் கல்விக்காக ஏராளமான பணம் ஒதுக்கிவிட்டதால், ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்குப் பணம் உதவவில்லை; எப்படியும் அடுத்த ஆண்டு பெல்லாரியில் சில ஆரம்பப் பள்ளிகளைப் புதியதாகத் துவக்க ஆவன செய்கிறேன்."

மருத்துவக் கல்லூரி திறப்பது பற்றி அவர் குறிப்பிட்டுள்ளதாவது:—

பெங்களூரில் உள்ள சில தனவந்தர்கள் மருத்துவக் கல்லூரி ஒன்று அங்கு ஏற்படுத்துவதற்காக பணம் திரட்டியுள்ளனர். கல்லூரியில் உள்ள ஒவ்வொரு மாணவர் இடத்துக்கும் ரு. **3000** என்று விலை நிர்ணயித்து வியாபாரம் நடத்தி வருகிறார்கள். கல்வியை இப்படி வியாபாரப் பொருளாக்குவதை நான் வெறுக்கிறேன். ஏனெனில் பணக்கார மாணவர்கள் மட்டுமே அக்கல்லூரியில் பயில முடியும்."

மாணவர்களின் 'என். சி. சி.' நிறுவனத்தை விரிவுபடுத்துவதை அவர் ஆதரிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

"இந்த நிறுவனத்திற்காக ஏராளமான பணம் வீணாகச் செலவிடப்படுகிறது; இந்த என். சி. சி. நிறுவனத்தில் வீணாகும் பணத்தில், பத்தில் ஒரு பங்கு கூட உபயோககரமான இளைஞர் நிறுவனங்களான சாரணர் இயக்கம், பாரத்சேவக் சமாஜ் போன்றவைகளுக்குச் செலவிடப்படுவதில்லை. இந்தவிதமான வேறுபாடுகள் ஒழிய வேண்டும்," என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

"ஆரம்பப் பள்ளிகளே இல்லாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன; ஆரம்பக் கல்வி தர வேண்டியது அரசாங்கத்தின் முதற்கடமையாகும்; இது செய்யப்படாவிட்டால், இடைநிலைக் கல்வியோ, அன்றி தொழிற் கல்வியோ வளராது.

"ஆரம்பக் கல்வியில்லாத இதர தரக்கல்விக்கான வசதிகளைச் செய்யும் பொறுப்பினை மக்களே எடுத்துக் கொள்ள வேண்டும்,"

என்றும் அவர் கருத்தறிவித்துள்ளார்.

நிலமற்றோருக்கு நிலம்

ஐதராபாத் மாநிலத்தில் உபரியாக உள்ள நிலத்தில் சுமார் 15,00,000 எக்கர் நிலத்தை நிலமில்லாத ஏழைகளுக்குப் பிரித்துத் தர உத்தேசித்திருப்பதாக வெங்கட்ட ரங்க ரெட்டி என்ற ஐதராபாத் ரெவினியூ மந்திரி பொதுக் கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

"ஏற்கனவே, 2 லட்சம் எக்கர் நிலம் அம்மாதிரி வினியோகிக்கப் பட்டுள்ளதென்றும், எஞ்சியுள்ள நிலம் இப்போது தரப்படுகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

2,94,460 கிராமங்களில் 98,256 பஞ்சாயத்துகள்

1954 மார்ச் 31-ந் தேதிவரை இந்தியாவில் மொத்தம் 98,256 பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஐந்தாண்டுத் திட்ட கால ஆரம்பத்தில் அதாவது 1951 மார்ச் 31-ந் தேதியன்று இருந்த பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை 83,093 ஆகும். எனவே, ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் மூன்றாண்டு காலத்தில் புதிதாக 15,163 பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நாட்டிலுள்ள மொத்தம் 5,81,814 கிராமங்களில், இப்பொழுது 2,94,460 கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருந்துவருகின்றன.

எகிப்திய உள்நாட்டிலாகா அமைச்சர் சக்ரியா மொகிதீன் தெரிவித்துள்ள அதிகார பூர்வமான செய்தி ஒன்றின்படி, எகிப்திய முஸ்லிம் உறவுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் பேர் சிறைக்குள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

சீக்கியர்கள் மதச் - சபையின் தேர்தல்

தாராசிங்கின் அகாலிதளத்தினர் வெற்றி

புதுடில்லி, நவ. 26—மாஸ்டர் தாராசிங்கின் அகாலி தளத்தினர், சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழுவிற்கான தேர்தல்களில் வெற்றி பெறுகின்றனர் என்று தெரிகிறது.

சீக்கியர்களின் மதச்சபையான இக்குழுவிற்கு மொத்தமாக 162 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இத்தேர்தலின் முதல் பகுதியில் 19 இடங்களில் தாராசிங்கின் அகாலிதளத்தினர் 16 இடங்களில் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

இப்போது சீக்கியர்களிடையே ஆதிக்கம் செலுத்திவரும் கால்சாதளத்தின் அபேட்சகர்களை எதிர்த்து அகாலிதளத்தினர் பஞ்சாபின் முக்கிய இடங்களில் 16 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

ஒரு வாரம் முழுவதும் தேர்தல் நடைபெறுமென்றும், 117 தொகுதிகளில் 132 உறுப்பினர்களை 13,00,000 வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்றும் தெரிகிறது.

சிரோமணி குருத்துவார் கழகம், இப்போது, கால்சாதளத்தினரின் பிடியில் இருக்கிறதாம்.

அமிர்தசரசில், சிரோமணி குருத்துவார்கழகத்தின் தலைவரான சர்தார் இஷர்சிங்கை, அகாலிதளத்தின் ஆதரவு பெற்ற கம்யூனிஸ்டு அபேட்சகர் சர்தார் மோகன் சிங் என்பவர் 1000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தாராம்.

சர்தார் இஷர் சிங், கால்சாதளத்தின் அபேட்சகர் ஆவார்.

வனஸ்பதி உற்பத்தியை தடை செய்க!

மக்கள் சபையில் மசோதா

இந்தியாவில் வனஸ்பதி உற்பத்தியையும், விற்பனையையும் தடை செய்யவேண்டுமெனக் கோரும் மசோதா ஒன்றை மக்கள் சபை விவாதித்தது. இந்த மசோதாவின் ஒரு பகுதி, சபையின் சென்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பண்டிட் தாக்கூர்தாஸ் பர்காவா என்ற பஞ்சாப் காங்கிரஸ் உறுப்பினர், வனஸ்பதியை உடன் தடை செய்யவேண்டுமெனக் கோரியதுடன், உடனடியாக அவ்வாறு செய்ய சாத்தியமில்லாவிடில், முன்னாள் உணவு மந்திரி கித்வாய் அறிவித்த மாதிரி, 'வனஸ்பதியை ஏதேனும் ஒரு நிறமுடையதாகவே தயாரிக்கச் செய்ய வேண்டும்,' என்றார்.

பீகார் காங்கிரஸ் உறுப்பினரான டி. என். திவாரி, "வனஸ்பதி, உடல் நலனுக்கு உகந்ததல்ல; தீங்கு பயப்பது என்று விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுவிட்டால், பண்டித நேரு வனஸ்பதி உற்பத்தியைத் தடை செய்து விடுவார். இந்த உறுதி மொழியை பண்டித நேரு சபையில் முன்பு தந்திருக்கிறார்," என்று குறிப்பிட்டார்.

இன்னும் பலரும் மசோதாவை ஆதரித்துப் பேசினர்.

திரு.வி.க. தமிழ்க் கல்லூரி

"திரு. வி. க. இலக்கிய மன்றத்தின் சார்பில் உள்ள திரு. வி. க. தமிழ்க் கல்லூரியில் வித்துவான் வகுப்பு, இலவசமாக சென்னை—வண்ணை சர். தியாகராயர் கல்லூரியில் மாலை 6 மணி முதல் 8-30 வரை நடைபெறுகிறது. வித்துவான் தேர்விற்குச் செல்ல விரும்பும் அன்பர்களும், தமிழ்ச் சுவை பெற விரும்புவோரும் இவ்வகுப்பில் சேர்ந்து, ஆக்கமும், ஊக்கமும் தருமாறு வேண்டுகின்றேன். விளக்கம் பெற விரும்புவோர் நேரில் பெறவும்," என்று, மன்றச் செயலாளர் தோழர் அ. பா. அரங்கன் தெரிவிக்கிறார்.

இலங்கையின் உள்நாட்டுப் பகுதிகளில் நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

★

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் இலங்கை உள்நாட்டுப் பகுதி சுற்றுப்பிரயாணத் தொடர்பில், கொழும்பு, யாழ்ப்பாண நிகழ்ச்சிகள் நேற்றைய இதழில் தரப்பட்டுள்ளன. அவருடைய சுற்றுப்பயணத்தில் மற்றைய பகுதிகளின் நிகழ்ச்சி விவரங்கள் இங்கு தரப்படுகிறது:—

திரிகோணமலை

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ஏனையவரும் 20—10—54-ம் நாள் காலை கழகத் தோழர்களிடம் விடைபெற்றுக்கொண்டு திரிகோணமலையை நோக்கிப் புறப்பட்டனர்.

வழியில் அனுராதபுரத்துக்குப் பன்னிரண்டு மைல்கள் தொலைவிற்கு முன்னால் அவர்கள் ஏறி வந்த காரின் ஸ்பிரிங் ஒடிந்து போகவே, அது சீர் செய்யப்பட ஆறு மணி நேரத்திற்கு மேலாகக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. கார் சீர் செய்யப்பட்ட நேரத்தில் தோழர் நெடுஞ்செழியனும், பிறரும், அனுராதபுரம் சென்று முதல் நாள் பார்க்காத பழமைச் சின்னங்களையும், புத்த கோயில்களையும், டகோபாக்களையும் பார்வையிட்டனர். அவர்கள் அனுராதபுரத்தை விட்டுத் திரிகோணமலை கிளம்புவதற்கு மாலை 5 மணி ஆகிவிட்டது.

திரிகோணமலையில், தி. மு. க. துணைச் செயலாளரை வரவேற்கக் கழகத் தோழர்களும், தமிழன்பர்களும் இளைப்பாற்று விடுதியில் காலையிலிருந்து காத்திருந்தனர். தோழர் இரா. நெடுஞ்செழியன் மாலை 7–15 மணிக்கு திரிகோணமலை வந்து சேர்ந்தார். கழகத் தோழர்களும், பிறரும் மலர் மாலைகள் சூட்டி வரவேற்றனர். இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் இராஜ வரோதயர் அவர்களும், திரிகோணமலை நகரசபைத் தலைவர் தோழர் ஏகாம்பரம் அவர்களும் தனித்தனியாக மலர்மாலைகள் சூட்டி வரவேற்று, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களோடு அரை மணி நேரத்திற்கு மேலாக அளவளாவியிருந்தனர். பின் அவர் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்தார்.

மறுமலர்ச்சிமன்ற வரவேற்புக் கூட்டம்

இரவு உணவுக்குப் பிறகு, கழகத் தோழர்களின் விருப்பத்திற்கிணங்க கூட்டு நிழற்படம் எடுக்கப்பட்டது.

பின்னர், இரவு 9–30 மணிக்கு தி. மு. கழகத் தோழர்களால் நடத்தப்படும் 'மறுமலர்ச்சி மன்ற'க் கட்டிடத்தைப் பார்வையிடுவதற்காகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அழைத்துச் செல்லப்பட்டார். கழகத் தோழர்கள் ஆர்வத்தோடு கூடியிருந்து வரவேற்றனர். இயக்க ஏடுகள், செய்தித்தாள்கள், கருத்திதழ்கள் ஆகியவற்றை வைத்து மன்றத்தைச் சிறப்பாக நடத்திவரும் தன்மையைக் கண்டு தோழர் நெடுஞ்செழியன் மன்றத்தாரைப் பாராட்டினார்.

தோழர் நெடுஞ்செழியன் மன்றத்தைப் பார்வையிட வந்திருக்கும் செய்தியைக் கேள்வியுற்றுச் சுமார் 300-க்கு மேற்பட்ட மக்கள் மன்றக் கட்டிடத்திற்கு முன்னால் கூடிவிட்டார்கள். கழகத் தோழர்களின் விருப்பத்திற்கிணங்க தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இயக்கக் கொள்கைகளை விளக்கிச் சுருக்கமாகப் பத்துநிமிட நேரம் பேசினார். மன்றச் செயலாளர் நன்றி கூற, கூட்டத்தினரிடம் விடை பெற்றுக்கொண்டு தோழர் இரா. நெடுஞ்செழியன் இளைப்பாற்று விடுதிக்கு ஓய்வு பெறச் சென்றார்.

கண்டி

21—10—54-ம் நாள் மாலை கண்டி பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்கச் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டி காலை 6 மணிக்குத் திரிகோணமலையை விட்டுத் தோழர் நெடுஞ்செழியன் அவர்களும், அவரோடு வந்த நண்பர்களும் புறப்பட்டனர்.

திரிகோணமலையிலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ள கன்னியா என்ற இடத்திலுள்ள வெந்நீரூற்றில் அவர்கள் நீராடினர்.

பின்னர், திரிகோணமலையிலிருந்து 83 மைல் தொலைவிலுள்ள பொலனறுவை என்ற இடத்திலுள்ள பழங்காலச் சின்னங்களையும், இடிந்து பாழடைந்த புத்த மதக் கோயில்களையும், மலையில் செதுக்கிய புத்தர் சிலைகளையும் பார்வையிடச் சென்றனர்.

பொலனருவையிலிருந்து 87 மைல்களுக்கு அப்பாலுள்ள கண்டிக்குப் போய்ச் சேர பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டனர்.

மாத்தளை வரவேற்பு

கண்டி நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, கண்டியிலிருந்து 15 மைலுக்கு இப்பாலுள்ள மாத்தளை என்ற ஊரில் கழகத் தோழர்கள் வரவேற்பு அளிக்கவேண்டி இளைப்பாற்று விடுதியில் பெருவாரியாகக் காத்திருந்தனர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வந்த காரை கழகக் கொடியைக் காட்டி நிறுத்தி அவருக்கு மலர்மாலைகள் சூட்டி வாழ்த்தொலிகள் கிளப்பினர். பின் இளைப்பாற்று விடுதியில் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

மாத்தளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தோழர் நெடுஞ்செழியனுக்கு வரவேற்பு இதழ் ஒன்று படித்தளிக்கப்பட்டது. தோழர் நெடுஞ்செழியன் புன்முறுவலோடு வாழ்த்திதழைப் பெற்றுக்கொண்டு கழக நடவடிக்கைகளைப் பற்றிச் சிறிது நேரம் அளவளாவியிருந்துவிட்டுக் கண்டியை நோக்கிப் புறப்பட்டார்.

அக்குறுணையில் வரவேற்பு

கண்டிக்கு அருகாமையிலுள்ள அக்குறுணை என்ற இடத்திலுள்ள கழகத் தோழர்களும், கழக அனுதாபிகளும், பொது மக்களும், காரை, சாலையில் நிறுத்தித் தோழர் நெடுஞ்செழியனுக்கு மலர் மாலைகள் சூட்டினர். தோழர் நெடுஞ்செழியன் வருகையை முன்னிட்டு அதிர்வேட்டுகளும், வெடிகளும் கிளப்பினர். நல்ல மழை பெய்து கொண்டிருந்ததால் கூடியிருந்தோரிடம் விடை பெற்றுக்கொண்டு அவரும் பிறரும் புறப்பட்டனர்.

பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புக்கூட்டம்

தோழர் இரா. நெடுஞ்செழியன் மாலை 5-30 மணிக்குக் கண்டி வந்து சேர்ந்தார். சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டான பிறகு, மாலை 6 மணிக்குப் பல்கலைக் கழகச் சொற்பொழிவு மண்டபத்திற்குச் சென்றார். மாணவர்களும், மாணவிகளும், ஆசிரியர்களும், பொதுமக்களும் மண்டபம் நிறைய ஆவலோடு கூடியிருந்தனர்.

பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத் தலைவர், செயலாளர், தமிழ்ப் பேராசிரியர் தோழர் கணபதியா பிள்ளை ஆகியோர் தோழர் இரா. நெடுஞ்செழியனை வரவேற்றுச் சொற்பொழிவு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். தமிழ்ச் சங்கத்தின் மாணவத் தலைவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தலைவர் தம் முன்னுரையில் முக்கிய விருந்தினரை வரவேற்றுப் பலபடப் பாராட்டிப் புகழ்ந்து கூறினார்.

பின்னர், பெருத்த கையொலிகளுக்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் எழுந்து "காலமும் கருத்தும்" என்னும் பொருள் பற்றி கருத்துமிகுந்த, அரிய அழகிய இலக்கியச் சொற்பொழிவு ஒன்று ஒரு மணி நேரத்திற்கு மேலாகப் பேசினார். இறுதியில் தலைவர் வேண்டுகோளின் பேரில், மாணவர்கள் கேட்ட சில கேள்விகளுக்குத் தக்க விடையளித்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டம் முடிந்ததும் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் தோழர் கணபதி அவர்கள் இல்லத்தில் தேனீர் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது. விருந்திற்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் வந்திருந்தனர். தோழர் நெடுஞ்செழியன், பேராசிரியர்கள் விரிவுரையாளர்களோடு சிறிது நேரம் அளவளாவியிருந்தார். பிறகு இரவு ஓய்வு எடுப்பதற்காகக் கண்டியிலிருந்து 10 மைல்களுக்கு அப்பாலுள்ள அம்பாலவாடீ எஸ்டேட்டில் போய்த் தங்கினார்.

செய்திச் சுருள்

மதுரை மஜீத் நினைவுப் படிப்பகம்

20—11—54ல், தோழர் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகத்தின் உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வி. சு. மணி; துணைச் செயலாளர்: ச. எமராசன்; பொருளாளர்: பி. எஸ். ரத்தினம்; நகர கழகப் பிரதிநிதி: எஸ். பழனிச்சாமி; பொறுப்பாளர்: மா. கு. சோலையப்பன்; விளம்பர உறுப்பினர்கள்: வீ. மாரிமணவாளன், வே. பாண்டி, சந்திரசேகரன். பின், கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டும், இந்திய-சீன வர்த்தக ஒப்பந்தத்தின்படி இந்தியாவில் இறங்கவிருக்கும் சீனத் துணிகள் நம் நாட்டின் சிறுதளவு கைத்தறித் துணியின் அபிவிருத்தியையும் நசுக்குமாதலால், அதை எண்ணமவிருக்கும் இந்திய அரசியலாரை வன்மையாகக் கண்டித்தும், மக்கள் கைத்தறி ஆடைகளையே அணியுமாறுகேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம்

ஐந்தாவது ஆண்டு விழா

நவ. 20, 21-ந் தேதிகளில், சங்க 5-வது ஆண்டு பேரவையும், விழாவையும் பம்பாய் தாராவி கணேசர் ஆலய சமவெளியில் திரு. மே. சு. மாசானம் தலைமையில் நடைபெற்றது. ஆண்டறிக்கை, வருடாந்திரக் கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர் சங்க நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: பி. டி. போராலே; துணைத் தலைவர்: பி. எஸ். அருணசலம்; செயலாளர்கள்: ந. சிவபாண்டியன், ச. மு. கணபதி, கா. பெ. சேவுகபெருமாள்; பொருளாளர்: ப. மு. பெருமாள். மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆண்டு விழா திரு. மோசஸ் தலைமையில், வரவேற்புரையும், திறப்பு விழாவும் நடைபெற்றபின், தோழர்கள் பலர்சொற்பொழிவாற்றினர். பின்னர், ஆட்குறைப்பு, கூலி வெட்டு, வேலை நேரம், வேலைப் பளு, இரவுப் பாடசாலை முதலிய தொழிலாளர் நலன்கள் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒண்டிப்புதூர் பாண்டியன் படிப்பகம்

24—11—54ல், தோழர் அ. நடராசு தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில், தற்போது நடைபெற்றுவரும் தேசிய நாடக விழாவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகம், சென்னை பிரதேச நாடகக் கலையின் உயர்வை அறிவிக்காத தன்மையிலிருப்பதையும், அவ்விழாவில் தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற கலைஞர்களை சேர்த்துக் கொள்வாததையும் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாவுதோச்சல் தொழிலாளர் கூட்டுறவுக் கழகம்

25—11—54 காலை 11 மணியளவுக்கு குன்றத்தூர் தி. மு. கழகத்தினர், பாவுதோச்சல் தொழிலாளர் கூட்டுறவுக் கழகத்தை ஆரம்பித்துவைத்து, அக்கழகத்தினர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி விளக்கிக் கூறினர். தோழர் டி. என். சம்பந்தம் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மக்கள் மன்றம் துவக்கம்

21—11—54ல், திருச்சி மாவட்டம், முசிரி தாலுகாவைச் சேர்ந்த வடமலைப்பட்டி கிராமத்தில், தோழர் செல்வராசு தலைமையில், திரு. நடேசன் அவர்கள் 'மக்கள் மன்றத்'தைத் திறந்துவைத்தார்.

வட சென்னை குறள்நெறிக் கழகம்

25—11—54 வியாழன் மாலை 6 மணிக்குத் தோழர் வீரன் பட்டறையில் (சென்னை-இராயபுரம் புளியங்கொட்டை முதலித் தோட்டம், ஆதம் சாயபு தெரு) தோழர் கி. தியாகராகன் தலைமையில் மேற்படி கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. செயலாளர்: தி. ந. மதிவாணன்; துணைச் செயலாளர்: மு. த. இளஞ்சேரன்; பொருளாளர்: மு. பொ. வீரன்; நிர்வாக உறுப்பினர்கள்: கி. தியாகராசன், கா. ஆனந்தன், முகமது அலி, ச. து. ராசசேகரன், ப. கோ. வீரராகவன், கரிகாலன், கோவிந்தன், நல்லதம்பி. வாரத்திற்கோர் நாள் குறள் வகுப்பு நடத்துவதெனவும், அடுத்து வரும் பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மதுரை குறள் மாநாடு

"5—12—54ல், மதுரை பழனி டாக்கீசில், பேராசிரியர் எம். இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும் "குறள் மாநாட்டிற்கு"த் தீர்மானங்கள் அனுப்ப விழைபவர்கள் 3-12-54க்குள் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்," என்று மதுரை இளைஞர் திராவிடர் கழகப் பொறுப்பாளர் தோழர் மீனாட்சி சுந்தரம் அறிவிக்கிறார்.

மெதூர் திருவள்ளுவர் மன்றம்

பொன்னேரிவட்டம் மெதூர் கிராமத்தில் உள்ள திருவள்ளுவர் மன்றச் சார்பில் 28—11—54-ல் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. ச. நடராசன் தலைமை தாங்கினார். மன்றத் தலைவர் நடராசன் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தார். அடுத்து தோழர் நல்லதம்பி சிறிது நேரம் பேசியதும், தோழர் எஸ். எஸ். தென்னரசு 'இன்றைய அரசியல் நிலை' குறித்து விளக்கம் தந்தார். இறுதியாக, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், 'தி. மு. கழகத்தின் இலட்சியமும் - கொள்கைகளும் வள்ளுவன் வகுத்த நெறிக்கு எவ்வாறு ஒத்தவை,' 'ஏன் வள்ளுவன் நெறி நாட்டு மக்களின் வாழ்க்கை நெறியாக அமைய வேண்டும் என்று தி. மு. கழகம் கருதுகிறது,' என்று விளக்கிப் பேசியதும் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

நன்றி அறிவிப்பு

"எனது இரண்டு வயது செல்வி 'மல்லிகா' 16—11—54ல் தவறிவிட்டதை அறிந்து, நேரிலும், காகித மூலமும் அனுதாபம் தெரிவித்தும், 24—11—54 அன்று நடைபெற்ற இறுதிச்சடங்குகளின் போது வந்திருந்தும் எனக்கு ஆறுதல் தெரிவித்த நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்,"என சென்னை சூளை தி. மு. கழக தோழர் சிவராசன் அறிவிக்கிறார்.

கார்ல் மார்க்சின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது

திறந்த வெளியில் மீண்டும் புதைக்கப்பட்டது

லண்டன், நவ, 26—

லண்டன் நகரில் புதைக்கப்பட்டிருக்கும் கம்யூனிசக் கொள்கையின் தோற்றுவாயான கார்ல் மார்க்சின் உடல், சென்ற செவ்வாயன்று தோண்டியெடுக்கப்பட்டது.

இதுவரையில் புதைக்கப்பட்டிருந்த இடம் மிகவும் குறுகியதாக இருந்ததாம்; ஆகவே, இப்போது, 'லண்டன் ஹைகேட் சிமெட்டிரி' யில் சிறிது விஸ்தாரமான இடத்தில் கார்ல் மார்க்சின் சவப்பெட்டி மீண்டும் உடனே புதைக்கப்பட்டது.

கடந்த 71 ஆண்டு காலமாக மார்க்சின் உடல் புதைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து 200 கெஜ தூரம் தள்ளி இப்போது சவப்பெட்டி புதைக்கப்பட்டிருக்கிறது.

சவக்குழி தோண்டுவோர் இரவு 12 மணிக்குமேல் தங்கள் வேலையைத் துவக்கினார்களாம்.

'அதே இடுகாட்டில், விஸ்தாரமான இடம் ஒன்றில், மார்க்சின் சவப்பெட்டி மீண்டும் புதைக்கப்பட்டால் பலர் அந்த இடத்தில் நின்று பார்க்க சௌகரியமாக இருக்கும்,' என்றே இவ்வாறு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இப்போது புதிதாக புதைக்கப்பட்டிருந்த இடத்தில் ஞாபகார்த்த சிலை ஒன்று அமைக்கப்படலாம் என்று தெரிகிறது.

சரித்திரக் கழகம் ஒன்றின் செயலாளரான ஜான் மோர்கன் என்பவர்தான் இந்த வேலையை முன்னின்று நடத்தினர் என்று தெரிகிறது.

இருபது ஆண்டு காலமாகவே, தான் இவ்வாறு செய்ய வேண்டுமென்று அவர் கருதியிருந்தார் என்று தெரிகிறது.

கார்ல் மார்க்சின் உடல் வைக்கப்பட்டிருக்கும் சவப்பெட்டியைத் தோண்டி எடுத்து வேறு இடத்தில் புதைப்பதற்குத் தேவையான அனுமதியை பிரிட்டனின் உள் நாட்டிலாகா தந்தது என்றும், ஆனால், சவப்பெட்டி தோண்டும் வேலை விடியற்காலைக்குள் நடைபெற்று முடிய வேண்டுமென்று அவ்விலாகா உத்திரவிட்டிருந்ததென்றும் கூறப்படுகிறது.

கார்ல் மார்க்ஸ்; ஜெர்மனியில், 'புரியர்' என்னும் இடத்தில் பிறந்தார். அவர் 34 ஆண்டு காலம் பிரிட்டனில் வாழ்ந்து அங்கேயே இறந்து போனர் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளலாம்.

கார்ல் மார்க்ஸ், தனது புத்தகமான 'மூலதன'த்தை, பிரிட்டனில்தான் எழுதினர்.

தவளைகளிடையே போராட்டம்!

சிங்கப்பூரில் மக்களிடையே பீதி!

சிங்கப்பூருக்கு 40 மைல் தூரத்தில் மத்திய கேடா பகுதியில் தவளைகளுக்கிடையே மிகப் பெரிய போராட்டம் நடைபெறுகிறதாம்.

இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தவளைகள் மடிந்து போயினவாம்!

மூன்று மணி நேரம், கறுப்பு நிறத் தவளைகளுக்கும், சிவப்பு நிறத் தவளைகளுக்கும் இடையே குளம்ஒன்றில்போர்நடைபெற்றது

இச்சம்பவம், நாட்டிற்கு வரப்போகும் நாசத்தை அறிவிக்கிறது என்று கிராம வாசிகள் கருதுகின்றனர் என்று தெரிகிறது.

நாசம் வராது தடுக்க கிராம மக்கள் கோழிக்குஞ்சுகளையும், பன்றிகளையும் கொன்று 'தேவதை'களை சாந்தப்படுத்துகிறார்கள் என்று தெரிகிறது!

இந்தியாவில் உள்ள மொத்தம் 45,907 தபாலாபீசுகளில் 38,728 தபாலாபீசுகள் கிராமப் பிரதேசங்களில் இருக்கின்றன.

திரு-தமிழர் பிரச்சினை

டெல்லி உணர்ந்து விட்டதாம்!

நேசமணி எம். பி. தரும் தகவல்

திரு-த. நா. காங்கிரசினர் மீது தொடரப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் எவருக்குமே இனிமேல் ஜாமீன் மனுக்கள் தாக்கல் செய்யவேண்டாமென்ற முடிவுக்குத் தாம் வந்துவிட்டதாகவும், தலைமை உயர் நீதிமன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்) பல மனுக்களை தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் யாவும் முடிவுபெற்றுவிட்டன என்றும் தி. த. நா. காங்கிரஸ் தலைவர் ஏ. நேசமணி தெரிவித்துள்ளார்.

தாம், டெல்லி சென்றிருந்தபோது, பிரதமர் நேரு பண்டிதரையும், உள் நாட்டமைச்சர் கட்ஜூவையும் சந்தித்துப் பேசுகையில், திரு-கொச்சி சர்க்காரின் அடக்குமுறைக் கொடுமைகளையும், அதன் விளைவுகளையும் விளக்கியதாகவும், அவற்றை விளக்கிக் காட்டும் புகைப்படங்களை அவர்களிடம்கொடுத்ததாகவும், இவ்விஷயங்களைக் கேட்ட நேரு பண்டிதர், திரு-கொச்சி பிரச்சினையில் மிக அக்கரை கொண்டவராகக் காணப்பட்டார் எனவும் அறிவித்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"திரு-தமிழக பிரச்சினை, இன்று, பெரியதோர் அகில இந்தியப் பிரச்சினையாக மாறிவிட்டது; நாட்டிலுள்ள எல்லா கட்சியினரின் கவனத்தையும் அது கவர்ந்துவிட்டிருக்கிறது; இங்கு நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் யாவும், டெல்லி வட்டாரத்தில் இப்போது தெளிவாகிவிட்டன. மேலும், பல்வேறு மாநில காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும், டெல்லி வந்திருக்கையில், பி.-சோ. கட்சி சர்க்கார், திரு-கொச்சியில் தொடர்ந்து ஆட்சி பீடத்தில் இருந்து வருவது அனுமதிக்கப்படக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டனர்."

கோரத் தீவிபத்து

50 கோடி பவுன் நாசம்

20,000 பேர்களுக்கு வேலையில்லை

இஸ்தான்புல் நகரக் கடை வீதியில் ஏற்பட்ட மிகப் பெருந் தீ விபத்து ஒன்றினால் 4 தெருக்கள் எரிந்து சாம்பலாயின. சேதம் மட்டும் சுமார் 50 கோடி துருக்கி பவுன் இருக்கக் கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

தீவிபத்தின் காரணமாக சுமார் 20,000 பேர்களுக்கு வேலையில்லாது போயுள்ளதாம்.

மதுரையில் தீ விபத்து

மதுரையை அடுத்துள்ள வலசை எனும் கிராமத்தில் பெருந் தீ விபத்து நேர்ந்ததாகச் செய்தி வெளியாகியுள்ளது.

சுமார் 145 வீடுகள் தீக்கிரையானதுமன்றி ஒருவருக்கு காயமும் ஏற்பட்டதாம்.

விபத்தினால் சுமார் ரூ. 15,000 நஷ்டமேற்பட்டிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

விருதுநகர் கம்யூனிஸ்டுக்கு இரண்டாண்டு கடுங்காவல்

மதுரை, நவ. 29—

விருதுநகர் கம்யூனிஸ்டு தோழரும் நகர சபை உறுப்பினருமான எஸ். உலகநாதன் என்பவருக்கு இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிபதி இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை தந்து, வழக்கொன்றில் தீர்ப்பளித்தார்.

தோழர் உலகநாதன் கடந்த பிப்ரவரி மாதம், பரமக்குடியில் நடைபெற்ற வரிகொடா இயக்க மாநாடொன்றில் பேசுகையில், வரி வசூலிக்க வரும் ரெவின்யூ இலாக்கா அதிகாரிகள் மீது பலாத்காரம் உபயோகிக்கத் தூண்டியதாகக் கூறி பரமக்குடி போலீசார் வழக்குத் தொடர்ந்திருந்தனர் எனத் தெரிகிறது.

கல்கத்தா துறைமுகத்திலும்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து சாமான்களை இறக்குமதி செய்ய தொழிலாளர்கள் இல்லாமையினால், 8 கப்பல்கள் கட்டிப் போடப்பட்டுள்ளனவாம்.

அதிகமான சம்பளம், வேலை வசதிகள் வேண்டுமென்பதே அவர்கள் கோரிக்கை. மேலும் அவர்கள் பாரத்தை தலைமேல் வைத்துச் சுமந்து செல்வதையும் ஆட்சேபிக்கின்றனர் எனத் தெரிகிறது.

சீக்கியர்களிடையே கலவரம்

ஜகத்ரியில் 8 பேருக்குக் காயம்

அம்பாலா, நவ. 23—

சீக்கியர்களின் மதச் சபையான சிரோமணி குருத்துவார் கழகத்திற்கு நடைபெறும் தேர்தல்களை ஒட்டி, அம்பாலா மாவட்டத்தைச் சேர்ந்த ஜகத்ரி நகரில், அகாலி தளத்தினருக்கும் தேசீய சீக்கியர்களுக்கும் இடையே கலவரம் மூண்டதாகத் தெரிகிறது.

இக்கலவரத்தில் எட்டுபேர் காயமுற்றனர் என்று தெரிகிறது. அவர்களில் மூன்று பேருக்கு துப்பாக்கிக் குண்டினால் காயம் ஏற்பட்டதாம்.

நகரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. போலீசார் இரண்டு பேரைக் கைது செய்துள்ளனர்.

சீக்கியர்களின் மதச் சபைக்கான தேர்தலில் அகாலி தளத்தினரின் அபேட்சகர் அடைந்தவெற்றியைப் பாராட்ட ஊர்வலம் ஒன்று நடத்தினார்கள் என்றும், அப்போது தேசீய சீக்கியர்களுக்கும் அகாலி தளத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டதாகவும் தெரிகிறது கற்கள் சரமாரியாக வீசப்பட்டன என்றும், பின்னர் கலகக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

இப்போது நிலைமை கட்டுப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. சர்க்கார் அதிகாரிகள், சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றுள்ளனராம்.

அமெரிக்க அணுசக்தி விஞ்ஞானி மரணம்

அமெரிக்காவில் முதல் முதலில் அணுகுண்டுவைத் தயாரிக்க உதவியாளரான டாக்டர் என்ரிகோ பெர்மி தனது 53-வது வயதில் இயற்கை எய்தினர்.

அவர் இத்தாலியில் பிறந்தவர்; 'நோபல் பரிசு' பெற்றவர் ஆவார்.

1938-ம் ஆண்டில் அமெரிக்கா சென்று குடியேறிய அவர், புற்று நோய் காரணமாக இறந்துபோனர் என்று தெரிகிறது.

சென்னை 5-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்கட்கு

★

2-12-54 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. க. (அவசரச்) செயற் குழுக் கூட்டம் கழக இல்லத்தில் நடைபெறும். செயற் குழு உறுப்பினர்கள் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'துப்பாக்கிப் பிரயோகம் எப்போது நடத்த வேண்டும்?'

டாக்டர் லோகியா விளக்கம்

"நிர்வாகத்தை நடத்த போலீசாரின் கரத்திலிருக்கும் துப்பாக்கிகளை நம்புகிற எந்த அரசாங்கமும், மக்களுக்கு நன்மை செய்ய முடியாது;

"அதுபோலவே, குழப்பம் விளைவித்தல், ஆயுதப் போர் புரிதல், கொலை செய்தல் இவற்றை நம்புகிற எந்த ஒரு கட்சியும் நாட்டுக்கு நல்லது செய்யுமெனக் கொள்ள முடியாது,"

என்று, டாக்டர் ராம் மனோகர் லோகியா, நாகபுரி மாநாட்டில் தனது தீர்மானம் தோற்றுவிட்ட பிறகு பேசிய பொதுக்கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறினர்:—

"மக்களுடைய எண்ணங்களைத் திருத்தவோ மாற்றியமைக்கச் செய்யவோ, அல்லது சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டவோ ஒரு அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது என்ற பிரச்னை, ஒரு அடிப்படைக் கொள்கையை உள்ளடக்கியதாகும்.

"இதற்கு எல்லா அரசியல் கட்சியினரும் ஒரு பரிகாரம் காண வேண்டும்.

"திரு—கொச்சியில், நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தை மட்டும் அல்ல நான் குறிப்பிடுவது; பொதுவாகவே, ஒரு நாட்டில், தேசீய உணர்வுகளை அடக்க அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமானல், கொடுமையும் பயங்கரமும் பயமுமே தலைதூக்கி நிற்கும். அங்கு. ஜனநாயகம் முழுத் தோல்வி அடையும்.

'ஜனநாயகம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அரசியல் கட்சிகள் மக்களின் விருப்பத்தின் மீது அமையவேண்டும்.

"கட்சியின் கடைசி அணியிலிருப்பவர்களின் சம்மதமின்றி தேர்தலில் போட்டியிடவும், போற்றப்படவுமான தலைவர்களைக் கொண்ட 'தனிப்பட்ட அரசியல்' ஒதுக்கப்பட வேண்டும்.

இந்தியா — பாகிஸ்தான் எல்லையில்.........

12-மணி நேர துப்பாக்கி சண்டை

பாகிஸ்தான் இந்திய எல்லையோரத்தில், இரு நாட்டு பாதுகாப்புப் போலீசாரும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்று தகவல் கிடைத்துள்ளது.

பெரோஸ்பூரிலிருந்து 20 மைல் தூரத்தில் இந்திய எல்லைக்குள் இருக்கும் சட்லெஜ் நதி தீரத்தில், கடந்த 26-ந் தேதி மாலை 5 மணி முதல் 27-ந் தேதி காலை 5 மணி வரை இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாம்.

பாக்-எல்லைப் பாதுகாப்புப் போலீசாரில் 75 பேர் சட்லெஜ் நதியைத் தாண்டி இந்திய எல்லைக்குள் வந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினராம். உடனே இந்தியப் போலீசாரும், எதிர்த் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் என்றும், அதன் பின்னர் பாக். போலீசார் திரும்ப தங்கள் எல்லைக்குள் ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது

இந்தச் சம்பவம் பற்றி பஞ். மேற்கு பஞ்சாப் அதிகாரிகளிடத்தில் இந்திய கிழக்கு பஞ்சப் அதிகாரிகள் புகார் தாக்கல் செய்துள்ளனராம். இந்தியத் தரப்பில் யாருக்கும் காயமேற்படவில்லை என்றும் அவ்வறிக்கையில் காணப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

பெங்களூர் மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில் நடைபெறும்

18—12—54 சனி:	19—12—54 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: காஞ்சி கல்யாணசுந்தரம்	தலைவர்: என். வி. நடராசன்
திறப்பாளர்: ப. உ. சண்முகம்	திறப்பாளர்: தோழியர் அருண்மொழி

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், கே. ஆர். ராமசாமி மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்து உண்டு

19-12-54 பிற்பகல் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால்

"நான் கண்ட ரஷ்யா" வில்லுப்பாட்டு நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்):

வரவேற்பாளர் ரூ. 3, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணா 8

வ. கு. தலைவர்கள்:	செயலாளர்கள்:	பொருளாளர்:
எஸ். ஜே. உசேன், எஸ். வி. பதி	ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன்	எம். ஆர். பெருமாள்

விளம்பரக் குழு: கி. சோழன், வெங்கடசாமி தொ. ப. தலைவர்: ஆர். ராகவன் துணை: சு. கண்ணன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.